## December 1, 2025 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. ஒன்பது மாநிலங்கள் மற்றும் மூன்று யூனியன் பிரதேசங்களில் நடைபெற்றுவரும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த (எஸ்ஐஆர்) பணிகளின் ஒட்டுமொத்த அட்டவணையையும் இந்திய தேர்தல் ஆணையம் ஒரு வாரம் நீட்டித்து அறிவிப்பு வெளியிட்டது.
   i. கால அவகாசம் குறைவாக இருப்பது வாக்காளர்களுக்கும், களத்தில் பணியாற்றும் தேர்தல் அலுவலர்களுக்கும் சிக்கல்களை உருவாக்குவதாக எதிர்க் கட்சிகள் குற்றஞ்சாட்டி வந்த நிலையில் இந்த அறிவிப்பை தேர்தல் ஆணையம் வெளியிட்டது.
   ii. தமிழ்நாடு, சத்தீஸ்கர், கோவா, குஜராத், கேரளம், மத்திய பிரதேசம், ராஜஸ்தான், உத்தர பிரதேசம், மேற்கு வங்கம் ஆகிய 9 மாநிலங்களிலும், அந்தமான்-நிக்கோபார் தீவுகள், லட்சத்தீவுகள், புதுச்சேரி ஆகிய மூன்று யூனியன் பிரதேசங்களிலும் எஸ்ஐஆர் பணி நவ.4-ஆம் தேதி தொடங்கி நடைபெற்று வருகிறது.
2. துருக்கியின் இஸ்தான்புல் நகரில் உள்ள நீல மசூதியை போப் 14-ஆம் லியோ பார்வையிட்டார்.
   i. போப்பாக தேர்ந்தெடுக்கப்பட்ட பின் துருக்கி, லெபனான் ஆகிய நாடுகளுக்கு தனது வெளிநாட்டுப் பயணத்தைத் தொடங்கியுள்ளார். துருக்கியில் தனது மூன்றாவது நாள் பயணத்தின்போது அவர் முதல்முறையாக இஸ்லாமிய வழிபாட்டு தலத்துக்குச் சென்றார்.
3. இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு, தான் நீண்ட நாள்களாகச் சந்தித்து வரும் ஊழல் வழக்குகளுக்காக அந்த நாட்டின் அதிபரிடம் மன்னிப்பு கோரி விண்ணப்பித்துள்ளார்.
   i. பெஞ்சமின் நெதன்யாகு மீது மூன்று தனித்தனி வழக்குகளில் மோசடி, நம்பிக்கைத் துரோகம், மற்றும் லஞ்சம் வாங்கிய குற்றச்சாட்டுகள் உள்ளன. இருப்பினும், அவர் இதுவரை எந்த வழக்கிலும் குற்றவாளி என நிரூபிக்கப்படவில்லை.
   ii. இஸ்ரேலின் வரலாற்றில் பதவியில் இருக்கும் ஒரு பிரதமர், ஊழல் வழக்கில் நீதிமன்ற விசாரணையை எதிர்கொள்வது இதுவே முதல் முறை என்பது குறிப்பிடத்தக்கது.
4. ஃபிஃப்ஜபிஏ உலகக் கோப்பை கூடைப்பந்து தகுதிச் சுற்று ஆட்டத்தில் பலம் வாய்ந்த சவூதி அரேபியாவிடம் 57-81 என்ற புள்ளிக் கணக்கில் வீழ்ந்தது இந்தியா.
   i. 20-வது உலகக் கோப்பை கூடைப்பந்து போட்டி 2027-ம் ஆண்டு ஆகஸ்டு, செப்டம்பர் மாதங்களில் கத்தாரில் நடக்கிறது. 32 அணிகள் பங்கேற்கும் இந்த உலக கூடைப்பந்து திருவிழாவுக்கு போட்டியை நடத்தும் கத்தார் தவிர மற்ற அணிகள் தகுதி சுற்று மூலமே நுழைய முடியும்.
5. நாடாளுமன்ற குளிர்கால கூட்டத் தொடர் திங்கள் கிழமை (டிச. 1) தொடங்கவுள்ளது. இதில், பொதுப் பயன்பாட்டுக்கான அணுசக்தி துறையில் தனியாரை அனுமதிப்பது, இந்திய உயர்கல்வி ஆணையம் அமைப்பது உள்ளிட்ட 14 மசோதாக்களை தாக்கல் செய்ய மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.
   i. 14 மசோதாக்கள்: அணுசக்தி மசோதா-2025, இந்திய உயர் கல்வி ஆணைய மசோதா, காப்பீட்டு சட்டத் திருத்த மசோதா -2025 (காப்பீட்டுத் துறையில் 100 சதவீத அந்நிய முதலீட்டுக்கு வழிவகுக்கும் மசோதா), தேசிய நெடுஞ்சாலைகள் சட்டத் திருத்த மசோதா, பெருநிறுவன சட்டத் திருத்த மசோதா, பரிவர்த்தனை சந்தைக் குறியீடு சட்ட (எஸ்எம்சி) மசோதா-2025, மத்திய கலால் சட்டத் திருத்த மசோதா-2025 (கேடு விளைவிக்கும் பொருள்களுக்கு கலால் வரி விதிக்கும்

மசோதா), சுகாதார பாதுகாப்பு மற்றும் தேசப் பாதுகாப்பு கூடு தல் வரி மசோதா-2025, ஜன் விஸ்வாஸ் (பிரிவுகள் திருத்தம்) மசோதா, திவால் சட்டத் திருத்த மசோதா உள்ளிட்ட மசோதாக்கள் தாக்கல் செய்யப்பட உள்ளன.

ii. நடப்பு நிதியாண்டுக்கான முதல் கட்ட துணை மானியக் கோரிக்கைகளும் தாக்கலாக உள்ளன.

6. பொருளாதாரம், ராணுவ பலம் உள்ளிட்டவற்றை அடிப்படையாகக் கொண்டு ஆசிய கண்டத்தில் பலம் வாய்ந்த நாடுகளாகத் திகழும் 'ஆசியா பவர் இண்டெக்ஸ் -2025' பட்டியலில் இந்தியா முக்கிய சக்தியாக உருவெடுத்துள்ளது.

i. ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கை மூலம் இந்தியா தனது ராணுவ பலத்தை சர்வதேச அளவில் நிரூபித்ததையடுத்து இந்த அங்கீகாரம் கிடைத்துள்ளது.

ii. ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த லோவி ஆய்வு நிறுவனம் நடத்திய 2025-ஆம் ஆண்டுக்கான ஆய்வு முடிவில் இத்தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும், சீனாவுடன் ஒப்பிடும்போது ஆசியாவில் இந்தியாவின் செல்வாக்கு குறைவாகவே உள்ளது.

iii. ஆசிய கண்டத்தில் பொருளாதார வளம், ராணுவ பலம், நாடுகளின் செல்வாக்கு, ராஜீய உறவுகள், கலாசார மேம்பாடு, பிற நாடுகளுடனான நல்லுறவு உள்ளிட்டவற்றின் அடிப்படையில் இந்த ஆய்வு நடத்தப்பட்டது.

iv. இதில் அமெரிக்கா 80.5 புள்ளிகளுடன் முதல் இடத்தில் உள்ளது. அமெரிக்கா ஆசிய கண்டத்தில் இடம் பெறாவிட்டாலும் அக்கண்டத்தில் தொடர்ந்து பல்வேறு நிலைகளில் செல்வாக்குடன் திகழ்ந்து வருவதால் முதலிடத்தைப் பிடித்துள்ளது. பெரும்பாலான ஆசிய நாடுகள் அமெரிக்க ஆதரவாகவும், அமெரிக்காவைச் சார்ந்தும் உள்ளன என்பதை இது காட்டுகிறது.

v. இந்தப் பட்டியலில் சீனா 73.7 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்தில் உள்ளது. இந்தியா 40 புள்ளிகளுடன் 3-ஆவது இடத் தைப் பிடித்துள்ளது. 40 புள்ளிகளைப் பெற்றதன் மூலம் ஆசியாவின் முக்கிய சக்தியாவும் இந்தியா உருவெடுத்துள்ளது.

vi. பொருளாதார திறனை வளர்த்துக் கொண்ட நாடுகள் பிரிவில் இந்தியா கடந்த ஆண்டு மூன்றாவது இடத்தில் இருந்து முதலிடம் பிடித்துள்ளது. இதில் ஜப்பானை இந்தியா பின்னுக்குத்தள்ளியது. இந்தியாவுக்கு அதிக அளவில் வெளி நாட்டு முதலீடுகள் வருவதே இதற்கு முக்கியக் காரணமாகும். பொருளாதார உறவுகளை சிறப்பாக வலுப்படுத்தும் நாடுகள் பிரிவில் இந்தியா 9-ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளது.

vii. இவை எல்லாவற்றுக்கும் மேலாக இந்தியாவின் பொருளாதார, ராணுவத் திறன் 2025- இல் வெகுவாக மேம்பட்டுள்ளது என்று அந்த ஆய்வில் கூறப்பட்டுள்ளது. இந்தியாவின் பொருளாதாரம் தொடர்ந்து சிறப்பாக வளர்ந்து வருவதும், தொழில்நுட்பத் திறன் மேம்பாடு, பிறநாடுகள் மீதான அணுகுமுறை ஆகியவை சிறப்பாக உள்ளதாகக் கூறப்பட்டுள்ளது. 'ஆபரேஷன் சிந்தூர்' நடவடிக்கை மூலம் இந்தியா தனது ராணுவ பலத்தை சர்வதேச அளவில் நிரூபித்ததன் மூலம் முக்கிய சக்தியாக உருவெடுத்துள்ளது.

viii. எனினும், வெளிநாடுகளில் இருந்து அதிக முதலீடுகளைப் பெறும் நாடுகளில் சீனாவைவிட இந்தியா ஒருபடி முன்னேறியுள்ளது என்று அந்த ஆய்வில் கூறப்பட்டுள்ளது.

7. இலங்கையில் 'டித்வா' புயலால் ஏற்பட்ட மழை வெள்ள பாதிப்புகளில் சிக்கியோரை மீட்க இந்திய விமானப்படையின் எம்ஐ-17 வி5 ஹெலிகாப்டர்கள் களமிறக்கப்பட்டுள்ளன.

i. கடந்த வியாழக்கிழமை முதல் இலங்கையில் பெய்துவரும் மழையால்

உயிரிழந்தோரின் எண்ணிக்கை 334-ஆகவும், மாயமானோரின் எண்ணிக்கை 370-ஆகவும் உயர்ந்தது. இதனால் அங்கு அவசரநிலை அறிவிக்கப்பட்டது. இதையடுத்து, அவசர தேவைக்காக மாவட்ட தலைமை நிர்வாக அதிகாரிகள் அதிகபட்சமாக ரூ.1.45 கோடி வரை செலவிட அரசு அனுமதி அளித்துள்ளது.

ii. நாடு முழுவதும் 3.09 லட்சம் குடும்பங்களைச் சேர்ந்த 11.18 லட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களை மீட்பதற்காக இந்திய விமானப் படையின் எம்ஐ-17 வி5 ஹெலிகாப்டர்கள் அனுப்பப்பட்டுள்ளன.

iii. ஏற்கெனவே, இலங்கை கடற் படையின் 75-ஆவது ஆண்டுவிழாவில் பங்கேற்கச் சென்ற ஐஎன்எஸ் விக்ராந்த் மற்றும் ஐஎன்எஸ் உதயகிரி ஆகிய போர்க் கப்பல்களில் 'ஆபரேஷன் சாகர் பந்து' முன்னெடுப்பின்கீழ் உணவுப் பொருள்கள், மருந்துகள் உள்பட 6.5 டன் நிவாரணப் பொருள்கள் அனுப்பப்பட்டன.

8. சத்தீஸ்கர் மாநிலம், ராய்பூரில் 'வளர்ந்த பாரதம்: பாதுகாப்புப் பரிமாணங்கள்' என்ற கருப்பொருளில் கடந்த மூன்று நாட்களாக நடைபெற்ற அகில இந்திய டிஜிபி-க்கள் மற்றும் ஐஜி-க்கள் மாநாடு, பிரதமர் மோடி உரையுடன் நிறைவடைந்தது.

9. பலத்த மழையால் பாதிக்கப்பட்ட விளை நிலங்கள் குறித்து டிசம்பர் மாதத்துகுள் கணக்கெடுக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு உரிய நிவாரணம் வழங்கப்படும் என்று மாநில வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தெரிவித்தார்.

i. கடலூர் மாவட்டம், குறிஞ் சிப்பாடி ஒன்றியம், தியாகவல்லி பகுதியில் நிரந்தர வெள்ளத்தடுப்புப் பணியாக ரூ.81.12 கோடியில் அருவாள் மூக்கு திட்டப் பணி நடைபெற்று வருகிறது. இந்தப் பணியை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், மாவட்டக் கண்காணிப்பு அலுவலர் அன் பழகன், ஆட்சியர் சிபி ஆதித்யா செந்தில்குமார் முன்னிலையில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.